# சிறுவர்

# அமுதம்

19.02.99

எண்ணம் .10

கிண்ணம்2



சிறுவர் இலக்கிய மாத சஞ்சிகை

Kinder literarisches Magazin

அன்புச் சிறுவர் சிறுமியரே!

நாடுகளுக்கிடையே சண்டைகள், தீர்வு காணாத இனப்பிரச்சனைகள், மதப் பிரச்சனைகள், சாதிப் பிரச்சனைகள், சகோதரர்களிடையே பூசல்கள் என நாங்களும் வாழ்கிறோம். வாழ்ந்து கொண்டிருக்கிறோம். பெரிய பிரச்சினைகளை விட்டு விடுவோம். சிறுவர்களாகிய உங்களால் கூடப் பிரச்சனைகள் பெரிதாகி பெரிய சண்டைகளாகக் குடும்பங்களுக்குள் வந்து விடுகின்றதே.

இது எப்படி வருகிறது? உங்களுக்கிடையே வரும் சின்னச்சின்னச் சண்டைகள், வீடுகளுக்குள் நுழைந்து பெரியவர்கள் தங்களுக்குள் சண்டையிடும் அளவுக்குக் கூடப் போய் விடும். போயிருக்கின்றன. உங்களுக்குள் வரும் விளையாட்டுச் சண்டைகளை உங்களுக்குள்ளேயே சமாதானமாக்கிக் கொள்ளப் பழகிக் கொள்ளுங்கள். வீட்டுக்குச் சென்று அம்மா அப்பாவிடம் முறையிடுவதைக் காட்டிலும் நீங்களே ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து வாழப் பழகிக் கொள்ளுங்கள்.

வாழ்க்கை வாழ்வதற்காகத் தான். சின்னச் சின்னச் சண்டைகளைப் பெரிதுபடுத்திப் பெற்றோருக்குத் தெரியப்படுத்தி, அது பெரிதாகும் போது ஒருவர் குறைகள் ஒருவருக்குத் தெரியும்போது அதைச் சொல்லி, ஒருவர் குடும்பத்தை ஒருவர் இழிவு படுத்தி, கேவலப்படுத்தி பலரும் அறியும் போது


ஒவ்வொருவரும் வெட்கிக் குனியும் நிலை கூட ஏற்பட்டுவிடும். இதனால்தான் பல குடும்பம் கேவலப்படுகின்றது.

பெரிய மனிதர்களால் செய்ய முடியாதவற்றைச் சிறுவர்களாகிய நீங்கள் செய்ய வேண்டும். உங்களால் அது முடியும்! ஏனெனில் முன்னேற்றம் கண்ட நாடுகளில் வாழ்பவர்கள் நீங்கள். பெரியவர்களாகிய நாங்கள் உங்கள் வயதில் கற்று அறிந்து கொண்டதைக் காட்டிலும், உங்களுக்கு இருக்கும் ஆற்றல் பெரிது. ஆதலால் எதையும் புரிந்து கொள்ளவும், திருத்திக் கொள்ளவும் உங்களால் முடியும். காலம் உங்கள் கையில்.! சறியவர்கள் பெரியவர்களால் திருத்தப்பட்ட நிலைமாறி, பெரியவர்கள் உங்களால் திருத்தப்பட வேண்டும்.

எதிர்காலத்தில் சண்டைகளினாலும், போரினாலும் உலகம் விடுபட வேண்டும். ஆரோக்கியமான உலகம் எமக்குக் கிட்ட வேண்டும். அந்த உலகத்தைப் பெற்றுத்தர உங்களால் தான் முடியும்! எதிர் கால உலகத்தை உங்கள் கைகளில் தாங்கிக் கொள்ளுங்கள். ஒளி கொண்ட அந்த உலகத்தில், உங்களின் பின்னால் பெரியவர்களாகிய நாம் உங்களுடன் கைகோர்த்துக் கொண்டு வர வேண்டும். இது எங்களின் எதிர்பார்ப்பு...............!!

ஆசிரியை-

# உண்மையான கல்வி



குமரன் கல்வி கற்பதில் மிகவும் ஆர்வம் உள்ளவன். அதன் காரணமாக அவன் பல துறைகளைக் கற்று முடித்தான். அப்படி இருந்த போதும், அவனுக்கு மேலும் மேலும் கல்வி கற்க ஆவலாய் இருந்தது. ஆனால் அவனுக்கு கல்வி கற்பிக்கக் கூடிய ஆசிரியர்கள் யாரும் அவன் வாழ்ந்த இடத்தில் இருக்கவில்லை. ஒருநாள் அவன் சந்தையில் ஒரு வயோதிபரைச் சந்தித்தான். தன் மனக்குறையை அவரிடம் பேசினான்.

அவ்வயோதிபர் குமரனிடம், "தம்பி, அடுத்த ஊரில் அறிவு நிரம்பிய பெரியவர் ஒருவர் இருக்கிறார். அவர் இரும்புவேலைகள் செய்பவர். அவரிடம் நீ சென்றால் நிறையக் கற்கலாம்." என்று கூறினார். அதைக் கேட்ட குமரன் மறுநாளே அடுத்த ஊருக்குக் கிளம்பினான். ஒரு வாரத்தின் பின் அந்த ஊரை அடைந்தான். அப் பெரியவரையும் சந்தித்தான். அவரிடம், "ஐயா, பெரியவரே! எனக்குக் கல்வி கற்பிக்க வேண்டும்." என்று வேண்டினான்.

"சரி, இங்கே வா, என்று தன் பக்கத்தில் இருத்தினார். அவன் கையில் உலைத்துருத்தியைக் கொடுத்தார். அதனை இயக்குமாறு குமரனிடம் கூறினார். குமரனும் எதுவும் பேசாமல் அதனைச் செய்து கொண்டிருந்தான். பெரியவர் தன் தொழிலைச் செய்து கொண்டே, அங்கு வருவோர் போவோரிடம் உரையாடிக் கொண்டிருந்தார். குமரனுக்கு எந்த விதமாகவும் கல்வி கற்பிக்கவில்லை.

இரண்டு கிழமைகள் இப்படியே சென்றன. ஒரு நாள் குமரன் பெரியவரிடம், "ஐயா! நான் உங்களிடம் கல்வி கற்கத்தான் வந்தேன். நீங்கள் எனக்கு எதுவுமே சொல்லித் தரவில்லையே?" என்று கேட்டான். அதற்குப் பெரியவர் "நீ, நான் சொன்னபடி உலைத்துருத்தியை இயக்கிக் கொண்டிரு." என்று கூறினார். அவரிடம் நாள்தோறும் கேள்விகள் வரும்.

அவற்றில் தகுதியுள்ளவைகளுக்கு அவர் மாலையில் விளக்கம் கொடுப்பார். இப்படியே இரண்டு வருடங்கள் கழிந்தன.

ஒரு நாள் பெரியவர் குமரனை அழைத்தார். அவனிடம், "உன் படிப்பு முடிந்து விட்டது. இனி நீ ஊருக்குப் போகலாம்." என்றார். வியப்படைந்த குமரன், "எனக்கு நீங்கள் எதுவுமே சொல்லித் தரவில்லையே!" என்றான். அதற்கு அவர் "உலகத்தில் உள்ள அனைத்துக் கல்விகளிலும் தலையாயது பொறுமைதான். அது உனக்கு வந்து விட்டது. இனி நீ கற்பதற்கு ஒன்றுமில்லை." என்று கூறி அனுப்பினார்.

பொறுமையைப் போன்ற சிறந்த பண்பு உலகில் எந்தக் கல்விக்கும் ஈடாகாது. அதனால் தானோ பெரியவர்கள் "பொறுத்தார் அரசாள்வார். பொங்கியவர் காடாள்வார்." என்று கூறினார்கள்.

-கபிலன் பரமசிவம்-

☺ மனிதன் தான் வாழ வேண்டும். தன்னைப் போலவே பிறரும் வாழ வேண்டும். மனிதர் எல்லோரும் மனிதனாகவே வாழ்ந்திட வேண்டும் என்ற மனப்பண்பைக் கொண்டவனாக இருக்க வேண்டும். அப்படி இருந்தால்தான் மனிதஇனம் ஒன்று பட்டு நாகரீக வாழ்வு வாழ முடியும்.

-அறிஞர் அண்ணா-

# நீதி



சுப்பு நல்லவன் தான். ஆனால் ஏழை. வாழ்க்கைக்கே கஷ்டப்பட்டான். அவன் ஒருநாள் கடைத்தெரு வழியாக நடந்து வந்து கொண்டிருந்தான். வரும்வழியில் எல்லோரிடமும் வேலை தருமாறு கேட்டுக் கொண்டு வந்தான். பெரிய படிப்புக்களோ, அல்லது திறமைகளோ இல்லாமல் யார்தான் அவனுக்கு வேலை கொடுப்பார்கள்? யோசித்துக் கொண்டே வழியில் நடந்து வந்தான்.

அப்போது அவனுக்கு முன்னால் கார் ஒன்று வந்து நின்றது. அதிலிருந்து, கனவான் ஒருவர் இறங்கினார். அவனுக்கு வேலை தருவதாக

அழைத்துச் சென்றார். அவனுக்கு அவர் அவனுக்கு வேலையும் எடுத்துக் கொடுத்தார். அதனால் அவன் குடும்பமும் பிழைத்தது. ஒவ்வொரு முறை வேலையின் போதும் அவனுக்கு மேலதிகமாகப் பணம் முதலாளி கொடுப்பார்.

அவன் மனைவி சம்பளப் பணத்தை வங்கியில் சேமிப்புக்காக வைத்துக் கொண்டு, மேலதிகமாகக் கிடைத்த பணத்தில் வாழ்க்கையை நடத்தி வந்தாள். ஆனால் அவனது வேலை நீடிக்கவில்லை. பறி போய் விட்டது. வீட்டில் எப்படித் தெரியப்படுத்துவது என்று யோசித்து விட்டு அது முடியாமையால் திருட முற்பட்டான். திருட்டுத் தொழிலும் இலாபத்தைத் தரவே, திருட்டையே தொழிலாகக் கொண்டு விட்டான்.

“பல நாள் திருடன் ஒருநாள் பிடிபடத்தானே வேண்டும்.” ஒரு நாள் ரெயில் பிரயாணத்தின்போது ஒரு பிரயாணியிடம் இருந்து பணப்பையைத் திருடிக் கொண்டான். கடை ஒன்றில் சாமான்கள் வாங்கும் போது கையும் மெய்யுமாகப் பிடிபட்டான். காரணம் அவன் திருடிக் கொண்டது வெறும் போலி நோட்டுக்களே. அதற்காக அவன்மீது வழக்குப் போடப்பட்டது.

போலி நோட்டடிக்கும் கும்பலைச் சேர்ந்தவன் என்று வக்கீல் வாதாடினார். போலி நோட்டை மாற்ற முயன்றான் என்று வழக்குச் சோடிக்கப்பட்டது. அவன் நீதிபதியிடம், "ஐயா, கள்ள நோட்டை மாற்ற நான் முயலவில்லை. நான் கடையில் சாமான்கள் வாங்குவதற்காக நோட்டைக் கொடுத்தேன்." என்று வாதாடினான்.

அதை ஏற்றுக் கொள்ள வக்கில் மறுத்து வாதாடினார். அப்போது சுப்பு, "ஐயா, நான் உண்மையைக் கூறுகின்றேன். நான் திருட்டைத் தொழிலாகக் கொண்டவன். ரெயிலில் பணப்பைத் திருடினேன். அதிலேயே ஒரு நோட்டை எடுத்துத் சாமான்கள் வாங்கப் போனேன். என்னை விடுதலை செய்து விடுங்கள்." என்று மன்றாடினான். நீதிபதி அவன் பக்கத்து நியாயத்தை ஏற்றுக் கொண்டார். சுப்புவும் விடுதலை செய்யப்பட்டான்.

> ☺ குழந்தைகள் இல்லை என்றால் உலகம் துன்பம் நிறைந்ததாகி விடும். வயோதிபர்கள் இல்லை என்றால் உலகம் மனிதத்தன்மை இல்லாததாகி விடும்.
>
> -கோலறிட்ஜ்-

# நாடு காண வெளிப்பட்ட கப்பலோட்டிகள்.

ஆரம்பகாலத்தில் ஆசியநாடுகளுக்கும் ஐரோப்பிய நாடுகளுக்கும் இடையேயுள்ள வியாபாரத் தொடர்பு துருக்கி நாட்டினூடாகவே நடைபெற்றது. ஆசிய நாடுகளுக்கும் ஐரோப்பிய நாடுகளின் வியாபார மையமாகத் துருக்கிநாடே விளங்கியது. துருக்கி நாடு இரு பக்க நாடுகளுக்குமிடையே வரி வசூலிக்கத் தொடங்கியது. இதனால் ஐரோப்பியநாடுகள் ஆசியநாடுகளுக்கு வேறு வழிகளைத் தேட முயன்றன.



1271 ஆண்டில் நெதர்லாந்து நாட்டவரான போலோவும் அவரது மகன் மார்க்கோபோலோவும் ஒரு பொழுதுபோக்குப் பயணம் ஒன்றின் மூலம் சீனாவை அடைந்தனர். 1295ஆண்டு மார்க்கோபோலோ சுமாத்திரா, இலங்கை இரண்டுக்கும் ஒரு சுற்று வழியைக் கண்டறிந்தார்.

1394- 1460 காலப்பகுதியில் போத்துக்கல் நாட்டவரான வாஸ்கொடகாமா என்பவர் கடற்பயணத்தை மேற்கொண்டார். அவர் முதலில்

VASCO DA GAMA



ஆபிரிக்காவின் நன்னம்பிக்கை முனையை அடைந்தார். காலநிலை காரணமாக மேலே பிரயாணத்தைத் தொடங்க முடியாமல் திரும்பினார். மீண்டும் கடற்பயணத்தைத் தொடர்ந்து இந்தியாவை அடைந்தார்.

1492 அளவில் இத்தாலி நாட்டவரான கிறீஸ்தோபர் கொலம்பஸ் இந்தியாவைக் கண்டு பிடிக்கும் நோக்குடன் கடற் பிரயாணத்தை மேற் கொண்டார். ஆனால் இவர் கண்டறிந்தது அமெரிக்காவின் பகாமாஸ் தீவைத் தான்.





FERNANDO MAGELLAN

1519 ஆம் ஆண்டளவில் போத்துக்கேயரான மகலன் ஐரோப்பாவிலிருந்து ஆசியாவுக்கும் அங்கிருந்து தென்னமெரிக்காவையும் சுற்றி வரும் கடல்வழியை அறிந்தார். அதன்படி உலகை 36 மாதங்களில் சுற்றி வந்தார். பூமி உருண்டை என்று நிரூபித்தவர் இவரே.

நிர்மலாபரமசிவம்-

# பிராணிகளின் இடம்பெயர்வு




பருவ மாற்றங்கள், உணவுப் பற்றாக்குறை, இனப்பெருக்கம், உடலில் ஏற்படும் சில மாறுதல்கள் போன்ற காரணங்களால், சில பிராணிகள் ஆண்டு தோறும் குறிப்பிட்ட பருவங்களில் இடம் பெயர்ந்து சென்று வேறு பருவங்களில் திரும்பி வருகின்றன. இதை "வலசை போதல்" என்று கூறுவார்கள்.இப்படிப் போகும் சில பிராணிகள் திரும்பி வருவதேயில்லை.

கடல்ஆமைகள் முட்டையிடும் பருவத்தில் வெப்பக்கடல் பகுதிகளுக்கும் இடம் பெயர்ந்து செல்லுகின்றன. இதில் வியப்பு என்ன தெரியுமா? ஒரு வருடம் ஒரு குறிப்பிட்ட கடற்கரைப் பகுதிக்கு முட்டையிடவரும் பெண் ஆமைகள் அடுத்த வருடம் அதே இடத்திற்குச் சரியாக அதே நேரத்துக்கு வந்து

மணலில் குழி பறித்து முட்டையிட்டு விட்டுப் போகின்றன.

ஈல் என்னும் விலாங்குமீன் கடலில் இடம் பெயர்ந்து முட்டையிட சுமார் 6400 கி.மீ தூரம் கூட பிரயாணம் செய்கிறது. முட்டையிட்டதும் அத அங்கேயே இறந்து விடுகின்றது. பழைய இடத்துக்குத் திரும்புவதில்லை. ஆனால் அதன் குஞ்சுகள் தாய் வாழ்ந்த இடத்திற்கு வந்து விடுகின்றன. பசுபிக் கடலில் வாழும் சால்மன்மீன்களும் இப்படியான வாழ்க்கையைக் கொண்டிருக்கின்றன.

“லோகஸ்ட்” என்னும் பாலைவன வெட்டுக்கிளிகள் வசந்தகாலத்தில் முட்டையிடும் பருவத்தில் வட ஆபிரிக்காவில் இருந்து தெற்கு சகாராவுக்கு ஆயிரக்கணக்கான கி.மீ தூரம் போய் மறபடியும் இலையுதிர் காலத்தில் திரும்புகின்றன. அவை பறக்கும்போது மேகமூட்டம் போல் மறைந்து சூரியஒளி பூமியில் படுவது இல்லை. அப்போது வெட்டுக்கிளிக் கூட்டம் ஒன்று ஒருநாளைக்கு 20 தொன் உணவைச் சாப்பிடுகின்றன.

சிலவகை வண்ணத்துப்பூச்சிகளும் இடம் பெயர்ந்து செல்கின்றன. வெள்ளை நிறமுள்ள வண்ணத்துப்பூச்சிகள் மற்றைய ஐரோப்பிய நாடுகளில் இருந்து பிரித்தானியாவுக்குச் செல்லுகின்றன. 1846ஆம் ஆண்டு இந்த

வண்ணத்துப்பூச்சிகள் பறந்தபோது பூமியில் சூரிய வெளிச்சம் குறைவாகத் தெரிந்ததாம். இவை பறக்கும்போது வாழத்தில் பனி பெய்வது போல இருக்கும். பெயின்ட்டட் லேடி என்னும் வண்ணத்துப்பூச்சிகள் வட ஆப்பிரிக்காவின் அட்லஸ் மலையிலிருந்து கூட்டங்கூட்டமாகப் புறப்பட்டு (மார்ச் மாதமளவில்) ஐரோப்பா வழியாக மத்தியதரைக்கடலைக் கடந்து (மே, ஜீன் மாதங்களில்) இங்கிலாந்தை அடைகின்றன. மோனார்க் என்னும் வண்ணத்துப்பூச்சிகள் ஆண்டு தோறும் கிழக்குக் கனடாவில் இருந்து தெற்கு மெக்சிக்கோவுக்கு சராசரியாக மணிக்கு 18 கி.மீ தூரம் பறக்கின்றன. காற்றுப் பலமாக வீசாவிட்டால் எங்கேயும் இருந்து இளைப்பாறாமல் !000கி.மீ தூரத்துக்குக் கூடப் பறப்பது உண்டு.

ஆர்க்டிக் டெர்ன் என்னும் பறவை குளிர்காலத்தில் வடதுருவத்திலிருந்து தென்துருவத்திற்குப் பறந்து போய்த் திரும்புகிறது. ஸ்வாலோ பறவைகள் தென் ஆப்பிரிக்காவிலிருந்து மாரிகாலத்தில் இடம் பெயர்ந்து மார்ச் மாதக்கடைசியில் இங்கிலாந்தை அடைகின்றன. இதில் ஆச்சரியம் என்னவென்றால் அவை எந்தப் பகுதிக்கு முன்பு போயினவோ அதே இடத்துக்குத் போவதுதான்.

மொஸ்கோவில் உள்ள மார்ட்டின் பறவைகள் மே மாதம் 17ஆம் நாள் புறப்பட்டு ஆகஸ்ட் 11ஆம் நாள் அதே இடத்துக்குத் திரும்புகின்றன. குளிர்

காலத்தைக் கழிப்பதற்காகக் செல்லும் கொக்குகள் வாழ்க்கையும் அப்படித்தான். வுட்காக் என்னும் பறவை இமயமலைக்கும் நீலகிரி மலைக்கும் 2400 கி.மீ எந்த இடத்திலும் தங்காமல் பறந்து வருகின்றது. வடஅமெரிக்காவில் கோல்டன் ப்ளோவர் என்னும் பறவை தென் அமெரிக்காவுக்கு அட்டாண்டிக்கடலைக் கடந்து பறக்கிறது.

காட்டுவாத்து மத்திய ஆசியாவில் இருந்து சைபீரியாவில் இருந்து 3200-4800 கி.மீ தூரம் வரை இமயமலைச் சிகரங்கள் வழியே பறந்து வந்து இந்திய ஏரிகளைச் சேர்கின்றன. ஹம்மிங் சிட்டுக்கள் (பெருவிரல் அளவு தோற்றம்) மெக்ஸிக்கோவில் இருந்து 800கி.மீ ஓரிடத்தில் நில்லாது பறந்து போகின்றன.

நியூபவுண்லாந்தில் ரெயின்மீர் மான்கள் குளிர்காலத்தில் தெற்கு நோக்கி இடம் பெயர்கின்றன. ஆனால் கோடையில் மறுபடியும் பழைய இடத்துக்கே வந்து விடுகின்றன. லெமிங் என்னும் பிராணி நோர்வேயிலும், ஆர்ட்டிக் பிரதேசங்களிலும் உள்ளது. இது இடம் பெயர்ந்து போனால் திரும்பி வருவதேயில்லை. இவைகள் எண்ணிக்கை கூடும் வேளைகளில் ஆறுகள் மலைகள் எல்லாவற்றையும் கடந்து போகின்றன. கிடைக்கும் உணவை உண்ணுகின்றன. போகும் இடங்களிலேயே இறந்தும் விடுகின்றன.

-கோகுலம் (மாதஇதழ்)-



பாண்டவர்கள் இடும்பவனத்தில் தங்கியிருந்த போது அவர்களுக்குப் பாட்டன் உறவு பூண்ட வியாசமுனிவர் அங்கு வந்தார். அவரைப் பாண்டவர்களும் அன்போடு உபசரித்தார்கள். ஆட்களே இல்லாத அந்தக் காட்டில் பாண்டவர்கள் தனித்து வாழ்ந்து வருவதைப் பார்த்ததும், வியாசருக்கு விசனமாக இருந்தது. அவர் பாண்டவர்களையும், குந்திதேவியையும் பார்த்து “இங்கிருந்து வெளியேறி எங்கேயாவது

வேறு வேடத்தில் வாழுங்கள்." என்று ஆலோசனை கூறிச் சென்றார்.

பின்பு பாண்டவர்கள், குந்திதேவி, இடும்பி ஆகியோரையும் அழைத்துக் கொண்டு சாலிகோத்திரர் என்னும் முனிவர் வசித்து வந்த வனத்தை அடைந்தார்கள். அங்கு இடும்பிக்கும் வீமனுக்கும் ஆண்குழந்தை ஒன்று பிறந்தது. குழந்தை இராட்சத குலத்தினதும், வீமனினதும் சேர்ந்த வலிமையுடன் பலமுள்ளதாகவும், வளர்ந்த குழந்தையாகவும் பிறந்தது. குழந்தைக்குக் கடோற்கஜன் என்று பெயர் சூட்டினார்கள்.

✡ பிறந்த குழந்தையான கடோற்கஜன் தந்தையாகிய வீமனையும் மற்றவர்களையும் பார்த்து "நான் என் தாயுடன் வேறு இடத்துக்குச் சென்று வாழ ஆசைப் படுகின்றேன். நீங்கள் எப்போது தேவையின் நிமித்தம் என்னை அழைக்கிறீர்களோ, அப்போது நான் வருவேன். இப்பொழுது எனக்கு விடை தாருங்கள்." என்று அன்புடனும், பணிவுடனும் கேட்டுக் கொண்டான். பாண்டவர்களும் அவனை அணைத்து உச்சி முகர்ந்து விடை கொடுத்து அனுப்பினார்கள்.

இதன் பின் சாலிகோத்திர முனிவரின் ஆசி பெற்றுக் கொண்டு, பிராமணர்களாக உருமாறி

ஆசார அனுட்டானங்களைக் கைக்கொண்டு, வேத்திரகீயம் என்னும் ஊரை அடைந்தார்கள். அங்கு பிராமணர்களே கூடுதலாக வாழ்ந்தார்கள். ஒரு பிராமணக் குடும்பத்தினர் அவர்கள் தங்குவதற்குத் தங்கள் வீட்டிலேயே இடமளித்தனர். அயலில் உள்ளவர்களும் மதிக்கும் வண்ணம் பாண்டவர்கள் வேத்திரகீயத்தில் வாழ்ந்து வந்தார்கள்.

✡ இராட்சதர்கள் தங்களின் பரம்பரையினர் மனிதர்களை விடவும் வலிமை உள்ளவர்களாக இருக்க வேண்டும் என்று விரும்பினார்கள். அதற்காக இறைவனிடம் தங்களின் பெண்களுக்குப் பிறக்கும் குழந்தைகள் பெரியவர்களைப் போலவே வளர்ச்சி பெற்றவர்களாகவும், வலிமை பெற்றவர்களாகவும், பேச்சு வன்மையுள்ளவர்களாகவும் இருக்க வேண்டும் என்று வரம் வேண்டிப் பெற்றுக் கொண்டனர். இதுவே கடோற்கஜன் பிறந்தவுடனேயே பேசினான்.

-தொடரும்-

☮ இணைக்கும் பாலத்தைக் கட்டுங்கள். பிரிக்கும் சுவர்களை எழுப்பாதீர்கள்.

-யேசு கிறீஸ்து-

# குறையைத் தேடி அலையாதே!



அணுவை அலட்சியப் படுத்தாதே
ஆக்கப் பணிக்கு அது உதவும்!
கணுவைக் கண்டு வெறுக்காதே
கருப்பஞ்சாற்றை அது கொடுக்கும்!

சிறியஉளி என்று ஏசாதே
சிகரங்களையும் அது பிளக்கும்!
சிறியஇலை என்று ஒதுக்காதே
சீக்கிரம் நோயை அது தீர்க்கும்!

சூரியச் சுடரைப் பழிக்காதே
சுட்டே கிருமியை அது கொல்லும்!
கூரிய முள்ளை இகழாதே
குங்கும ரோஜாவை அது காக்கும்!

சிறு அச்சாணியைத் தூற்றாதே
சிறப்பத்தேரை அது ஓட்டும்!
கரிய இருளைப் பழிக்காதே
கைவிளக்கு ஏற்று அதுபோதும்! -பல்லவன்-

# தமிழ்ச் சொற்கள்

தமிழில் சில சொற்கள் இப்படி எழுதினாலும் பிழையில்லை என்கிறார்கள் தமிழ் அறிஞர்கள். உதாரணமாகச் சிலவற்றைப் பார்ப்போம்.

1. சுருசுருப்பு- சுறுசுறுப்பு, 2. பவளம்- பவழம், 3.வியர்வை- வேர்வை, 4. கோயில்- கோவில், 5. யானை- ஆனை, 6. மதில்- மதிள், 7. ஔவை- அவ்வை, 8. ஐயர்- அய்யர், 9. துளை- தொளை

இதே போல பிரித்துப் பார்க்க முடியாமல் தமிழில் கலந்து விட்ட சொற்கள் ஏராளமானவை. அவற்றுள்ளும் சிலவற்றைப் பார்ப்போம்.

| கலந்த சொற்கள்: | மொழி |
|---|---|
| கொக்கு- | துளு |
| அந்தோ | பாளி |
| சிக்கு | கன்னடம் |
| அக்கறை | கன்னடம் |
| எச்சரிக்கை | தெலுங்கு |
| சொந்தம் | தெலுங்கு |
| ஏராளம் | தெலுங்கு |
| சாகுபடி | தெலுங்கு |

அரபுச் சொற்கள்:

அல்வா, ஆபத்து, சாமான், பதில், தராசு, சிப்பந்தி, தயார், காகிதம், தபால், நகல், நபர், மனு, மைதானம், எஜமான், புகார், வாரிசு, சந்தா, ராஜிநாமா

ஐரோப்பிய மொழிகள்:

அலுமாரி, சப்பாத்து, மேசு, லேஸ், கவுண், யன்னல், மேசை, கதிரை, கச்சேரி,

இவை உதாரணத்துக்காகத் தரப்பட்டவை. வடமொழிச் சொற்கள் தமிழ்ச் சொற்களாகவே பயன்படுத்திக் கொள்கிறோம்.

உதாரணம்: சகோதரன், கல்யாணம், அப்பியாசம், அபிவிருத்தி, அற்புதம், பூரணம், பக்தன், ஞாபகம், தர்மம்

இவைகளைத் தவிர சந்தோஷம்- சந்தோசம், சந்யாஸி- சன்னியாசி, நிஜம்- நிசம், நஷ்டம்-நட்டம், வஸ்த்திரம்-வத்திரம், ஆஸ்சர்யம்- ஆச்சரியம், சிம்ஹாசனம்- சிம்மாசனம் இவ்வாறு தமிழ்ச் சொற்களாக மாற்றம் செய்தும் எழுதுகின்றோம்.

நல்ல தமிழ் எழுதுவது எப்படி?
தமிழில் பிழையின்றி எழுதுவது எப்படி?
தமிழில் க்ச்த்ப் பிழையின்றி எழுதுவது எப்படி? ஆகிய புத்தகங்களில் இருந்து சில உதாரணங்கள் இவை.

## செய்த தவறு?



முகலாய மன்னர்களுள் ஔரங்கசீப் பிரபலமான இடத்தைப் பிடித்துக் கொண்டவன். சிறந்த வீரன். தந்திரசாலி. நாடுகளைக் கைப்பற்றி தனது ஏகாதிபத்திய ஆட்சியை விஸ்தரிப்பதில் தீவிரமாக முயற்சி செய்து வந்தான். ஆனால் மராட்டிய மன்னனான சிவாஜி ஔரங்கசீப்பின் முயற்சிக்கு முட்டுக்கட்டையாக இருந்தான்.

ஔரங்கசீப்பைப் போலவே சிவாஜியும் சிறந்த வீரர். போர்த் தந்திரங்களை நன்கறிந்தவர். சிவாஜி மன்னரை எப்படியாவது அடி பணிய வைத்து விட வேண்டும் என ஔரங்கசீப் எண்ணினான். அதில் வெற்றியும் பெற்று விட்டான். ஒருதரம் சிவாஜியை

டெல்கிக்கு வரவழைத்து தந்திரமாகச் சிறையில் அடைத்து விட்டான்.

ஆனால் சிவாஜியோ, சிறைக்காவலாளிகளைத் தந்திரமாக ஏமாற்றி விட்டு, ஒரு பெரிய பழக்கூடைக்குள் ஒளிந்திருந்து தப்பிக் கொண்டார். இதன்பின் ஔரங்கசீப் தன் வாழ்நாள் முழுவதும் மராட்டியர்களுடன் போர் செய்தபடியே இருக்க வேண்டியதாயிற்று.

தான் பெற்ற தோல்வியை ஓரங்கசீப் தன் இறதிக்காலத்தில் பின்வருமாறு கூறிக்கொண்டதாக வரலாறு சொல்கிறது:

“ஒரே ஒருதரம் கவனக் குறைவாக இருந்ததால், எத்தனை பெரிய அவமானத்தையும், இழப்பையும் எனக்குத் தந்து விட்டது. சிறையில் இருந்த சிவாஜியைத் தப்ப விட்டதில் என் வாழ்நாள் முழுவதும் மராட்டியருடனான போரிலேயே கழிந்து விட்டது. மனிதன் எந்நேரமும் விழிப்பாக இருக்க வேண்டும் என்பதை உலகம் என் வாழ்விலிருந்து கற்றுக் கொள்ளட்டும்.”

ஒரு கைதடி பார்வையில்லாதவனுக்குக் கண்ணாக இருக்கிறது. காலிழந்தவனுக்குக் காலாக இருக்கிறது. மனிதா! நீ அந்தக் கைதடியை விடவும் தாழ்ந்தவனா?

— யாரோ —

## வினாவிடைப் போட்டி

1. போப் பதவியை முதன்முதலில் வகித்தவர் யார்?

பீடபூமி, வேட்டி, தொடர்பு, வல்லுனர்.

2. பாதரச உற்பத்தியில் முதல் இடத்தில் இருக்கும் நாடு எது?

இலை, சுத்தம், தாவரம், மெலிந்த.

3. உலகில் பெரிய பாலைவனத்தின் பெயர் என்ன?

வஞ்சகம், காட்சி, இராமன்

4. பர்மாவின் நாணயத்தின் பெயர் என்ன?

கிராமம், யாழ்ப்பாணம், மாவட்டம்.

5. உலகில் பெரிய உப்பு நீர் ஏரி எது?

பாதுகாவலன், ஸ்தாபனம், பிரயாணம், ஓவியம், புதல்வன்.

தயாரித்தவர்: செந்தூரன் குணபாலசிங்கம்.

முடிவு திகதி: 1.04.99

# குரங்குத் தலைவன்



ஒரு காட்டில் நிறையக் குரங்குகள் வசித்து வந்தன. அந்தக் குரங்குகள் எல்லாவற்றிற்கும் முதிய வயதுள்ள குரங்கு தலைமை வகித்தது. குரங்குகள் தலைவனின் சொற்களுக்குக் கீழ் படிந்து நடந்து வந்தன. "பழங்கள்,இலைகள் போன்றவைகள் புதியவைகளாக இருந்தால் அதாவது முன்பு பார்க்காதவைகளாக இருந்தாலோ, புதிய நீர்நிலைகளைக் கண்டாலோ, தன்னைக் கேட்காமல் என் அனுமதி இல்லாமல் யாரும் உட் கொள்ளக் கூடாது. இது எனது அன்பான கட்டளை" என்றது.

ஒரு சமயம் காட்டில் சரிவர மழை இல்லாமையால் குரங்குகள் உணவுக்குக் கஷ்டப் பட்டன. குரங்குத் தலைவன் யோசித்தது. "இனி வேறு இடம் பார்க்க வேண்டியது தான்!." தன் எண்ணத்தைக் குரங்குகளுக்குத் தெரிவித்தது. குரங்குகளும் தலைவன் எல்லாக் குரங்குகளையும் அழைத்துக் கொண்டு வேறிடம் நோக்கிப் புறப்பட்டது.

வெயில், மழை பாராத நீண்ட தூரப் பிரயாணம், பசியும், தாகமும் குரங்குகளை வாட்டி எடுத்தன. களைத்துச் சோர்ந்து விட்ட தன் கூட்டத்தை உற்சாகப்படுத்த பாட்டுக்கள், வேடிக்கைக் கதைகள் சொல்லிக் கொண்டே, தலைவன் அழைத்துக் கொண்டு சென்றது. ஒருவாறு பசுமை நிறைந்த காடு ஒன்றைக் குரங்குகள் கண்டன. உற்சாகம் பீறிடக் குரங்குகள் ஒன்றையொன்று முந்திக்கொண்டு ஓட்டமும் நடையுமாக அவ்விடத்துக்குச் சென்றன.

இடையே குளம் ஒன்று தென்பட்டது. தாகத்தைத் தணிப்பதற்காகக் குரங்குகள் தலைவனின் கட்டளையையும் மறந்து குளத்தை நெருங்கின. "எல்லோரும் குளத்திற்குக் கிட்ட நெருங்காதீர்கள்." என்று அதிகாரத்துடன் தலைவன் தடுத்தது. எல்லாக் குரங்குகளும் அதிகாரத்துக்குக் கட்டுப்பட்டுக் கரையிலேயே நின்று கொண்டன. தலைவன் குளத்தைச் சுற்றி வந்து நோட்டமிட்டது. மிருகங்களின் காற்சுவடுகள் குளத்தை நோக்கிச் சென்றிருந்தனவே தவிர, திரும்பி வழி நடந்ததாகத் தெரியவில்லை. பக்கமெங்கும் காய்ந்த மூங்கில்கள் காணப்பட்டன.

அந்தக் குளத்துள் அரக்கன் ஒருவன் வசித்து வந்தான். அவன் அங்கு நீரருந்த வரும் எந்த மிருகத்தையும் பிடித்துத் தின்று விடுவான். அன்றும் குரங்குகள் கரையில் இருப்பதை அறிந்து ஒளிந்து இருந்தான். குரங்குகள் நீரருந்தாமையால் தானே வெளியே வந்தான். "குரங்குத் தலைவரே! நல்ல சுத்தமான நீர் மட்டுமல்ல, சுவையான நீரும் கூட. ஏன் யாருமே நீர் அருந்தாமல் யோசித்துக் கொண்டு நிற்கிறீர்கள்?. எல்லோருமே நீரருந்தலாமே!" என்று அன்போடு உபசரிப்பவனைப் போல அழைத்தான்.

அப்போது தலைவன் "அரக்கனே! இங்கு தாகம் தீர்க்கவரும் மிருகம், பறவை, மனிதன் என்று எவைகளாக இருந்தாலும் நான் சாப்பிடுவேன். நீங்கள் இறங்கினால் உங்களையும் தான்." என்றான். அப்போது தலைவன் அரக்கனைப் பார்த்து, "நாங்கள் குளத்தில் இறங்காமலே நீர் அருந்துவோம். பார்க்கின்றாயா?" என்றது. அரக்கனும் "சரி, பார்க்கலாம்!" என்றான். தலைவன் குரங்கு மூங்கில் தடியை எடுத்துக் கொண்டது. அதை ஊதியது. தடைகள் நீக்கி அதைக் குழலாக்கியது.

அதைப் பார்த்து மற்றக் குரங்குகளும் மூங்கில் குழல் செய்தன. குளத்தை நெருங்காமலே மூங்கில் குழல் மூலம் நீர் அருந்தின. பின்பு மூங்கில் குழல்களை எறிந்து விட்டு அவ்விடத்தை விட்டுச் சென்றன. அரக்கன் ஏமாந்தவனாகக் குளத்துள் மறைந்தான்.

Nektar für die Kinder

Nectar pour les enfants

Nectar for the childrens

